# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO.76/2017

P.W.2- ஐயப்பன் த/பெ.நடராஜன்

DATE:05.01.2023

வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 2, 3 மற்றும் 9 தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ஏரியூரில் குடியிருக்கிறேன். வாதி விஸ்வநாதன், 3வது பிரதிவாதி முருகன் ஆகியோர் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் அலமேலுமங்காபுரத்தில் குடியிருக்கிறார்கள். என் வீட்டிற்கும் அவர்கள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கி.மீ. தூரம் இருக்கும். சுமார் 1 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும என்றால் தவறு. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என் அப்பா சேர்த்து 4 பேர்கள். அவர்கள் பெயர்கள் சுப்பிரமணி, ராமஜெயம், நடராஜன் (என் அப்பா), உலகநாதன். அவர்களில் சுப்பிரமணி, (என் அப்பா), உலகநாதன் ஆகியோர் ராணுவத்தில் பணி புரிந்தார்கள் என்றால் சரி தான். என் அப்பாவிற்கும் இறந்து போன முதல் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரி தான். எவ்வளவு காலமாக பேச்ச வார்த்தை இல்லை என்றால் சுமார் 15 வருடமாக இல்லை. 1990ல் என் அப்பா பாகபரிவினை செய்து கொண்டது குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். என் அப்பா 1973ல் வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் நவாப்ஜான் என்பவரிடமிருந்து 14 1/2 சென்ட் நிலம் கிரையம் வாங்கினார் என்றால் சரி தான். அந்த கிரையம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். அதே தேதியில் 2ம் பிரதிவாதி ஜெகதாம்மாள் வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் நவாப்ஜான் என்பவரிடமிருந்து 14 1/2 சென்ட் நிலம் கிரையம் வாங்கினார் என்றால் சரி தான். அந்த சமயத்தில் நான் பிறக்கவே இல்லை என்றால் சரி தான்.

அதனால் ஜெகதம்மாள் நவாப் ஜானுக்கு கொடுத்த கிரைய தொகை குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். அதே போன்று ஜெகதாம்மாள் மாடு வைத்து பால் வியாபாரம் செய்தது குறித்தும், அவருக்கு என்ன வருமானம் வந்தது என்றும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். ஜெகதாம்மாள் தற்போதும் மாடு வைத்து பால் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் வீட்டிற்கும் ஜெகதாம்மாள் வீட்டிற்கும் போக்குவரத்து எதுவும் இல்லை என்றால் சரி தான். ஜெகதாம்மாள் வீட்டிற்கு நான் சென்று சுமார் 20 வருடங்கள் இருக்கும் என்றால் சரி தான். நாங்களும், சுப்பிரமணி வீட்டிற்கும் நல்லது கெட்டதுக்கு போனதில்லை என்றாலும், சுப்பிரமணி வீட்டினரும் நல்லது கெட்டதுக்கு எங்கள் வீட்டிற்கும் வந்தது இல்லை என்றால் சரி தான். என் அப்பா சுப்பிரமணிக்கு 14 1/2 சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். அந்த 14 1/2 சென்ட் நிலத்தை தான் சுப்பிரமணி ஜெகதாம்மாளுக்கு வா.சா.ஆ.6 முன்னிலைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். என் அப்பாவிற்கு பாகபிரிவினை மூலம் வந்த சொத்தில் 11 சென்ட் நிலத்தை 3வது பிரதிவாதி முருகனுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். அந்த கிரைய பத்திரத்தில் என்னை தரப்பினராக காண்பிக்கவில்லை என்றால் சரி தான். என் அப்பா கூட்டு குடும்ப சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் என்னை கேட்டு தான் கிரையம் கொடுத்தார் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. என் அப்பாவிற்கு பாகபிரிவினை மூலம் வந்த சொத்து என்பதால் அது அவரின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் என்னிடம் அவர் ஒப்புதல் பெறாமல் 3வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தவறு. என் அப்பா சுப்பிரமணியிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தை என் பெயரில் செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி தான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 அக்கா, 1 தங்கை. என் பெயரில் எழுதி வைத்த செட்டில்மென்ட் பத்திரத்தில் என் சகோதரிகள் யாரும் தரப்பினர்கள் இல்லை என்றால் சரி தான். என் தகப்பனாரும், முதல் பிரதிவாதி சுப்பிரமணியும் பரிவர்த்தனை செய்து

கொண்ட சொத்து அவர்களின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் என் சகோதரிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தவறு. இந்த வழக்கில் என்னென்ன சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரி தான். அதனால் பி ஷெட்யூல் ஜெகதாம்மாளின் கூட்டு குடும்ப சொத்தா என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். ஜெகதாம்மாள் முருகன், ஜோதி ஆகியோருக்கு வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணங்கள் முன்னிலையில் எழுதி வைத்த செட்டில்மென்ட் குறித்தும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். அந்த செட்டில்மென்ட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் குறித்தும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி தான். நான் இந்த வழக்கில் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரி தான். அதனால் தாவா சொத்து கூட்டு குடும்ப சொ௱த்து என்றும் அந்த சொத்தில் வாதி கோரியபடி வாதிக்கு பாகம் உள்ளது என்று சொல்வதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் தவறு. மாதவன், ஏழுமலை என்பவர்கள் யாருடைய பிள்ளைகள் என்றால் ராமஜெயம் என்பவரின் பிள்ளைகள். ராமஜெயம் எனக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா. சுப்பிரமணி மாதவன், ஏழுமலைக்கு கிரையம் கொடுத்தது குறித்து தெரியுமா என்றால் கிரையம் கொடுத்தது தெரியும்,. ஆனால் எவ்வளவு சொத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்பது குறித்து தெரியாது. ராமஜெயம் குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் இடையே எவ்வளவு காலமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் பேச்சு வார்த்தை உள்ளது. எங்களுக்கும் ராமஜெயம் குடும்பத்துக்கும் இடேயே பேச்சு வார்த்தை இல்லை என்றால் தவறு. சுப்பிரமணி குடும்பத்தில் வாதி விஸ்வதநாதனுடன் மட்டும் தான் பேச்ச வார்த்தை உள்ளது என்றால் தவறு. அவருடனும் பேச மாட்டேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதி விஸ்வதநாதனுடன் மட்டும் தான் பேச்ச வார்த்தை உள்ளது என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் தவறு. எங்களுக்கும் சுப்பிரணை குடும்பத்திற்கும் சுமார் 30 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்பதால் அவர்கள்

குடும்பத்தில் என்ன நடக்கிறது என்பது குறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் தவறு. வழக்கு பி ஷெட்யூல் சொத்து கூட்டு குடும்ப சொத்தா அல்லது ஜெகதாம்மாளின் தனிப்பட்ட சொத்தா என்று எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறு.

<u>பிரதிவாதிகள் 5, 7, 8 தரப்பில குறுக்கு விசாரணை</u>

என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் இவ்வழக்கு எ ஷெட்யூல் சொத்து குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரி தான். முதல் பிரதிவாதி சுப்பிரமணிக்கு எவ்வளவு செர்த்துக்கள் சொந்தமாக இருந்தது என்பது குறித்தும் அவற்றில் எவ்வளவு சொத்துகளை விற்று விட்டார் என்று எனக்க தெரியாது என்றால் சரி தான். சுப்பிரமணி எவ்வளவு சொத்துகளை வைத்து விட்டு சென்றால் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரி தான். அதனால் எனக்கு வழக்கு குறித்து எந்த விவரங்களும் தெரியாது என்றாலும் வாதி விஸ்வநாதன் சொல்லீ கொடுத்தது போல் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறு.

P REVATHY Digitally signed by P REVATHY DN: cn=P REVATHY, ou=VELLORE, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

Additional District Judge (FTC),

Vellore.